1973 நவம்பர் 20]

பெண்களாகயிருந்தால், கணவர் ஒரு பிரைமரி ஹெல்த் செண்டரிலும், மனைவி மற்றொரு மருத்துவ மனையிலும் இருக்கிறார்கள். அவர்களை இணைத்துப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் நல்வாழ்வுத் துறையிலே அமைச்சராகயிருந்த காலத்தில் இருந்தே டாக்டர்களை நியமிக்க வேண்டுமென்றால் ரெஜிஸ்ட்ரேஷன் டேட் படி நியமிக்க வேண்டுமென்ற முறையிருக்கிறது. மேலும், வேலைக்குப் பதிவு செய்துகொண்டவர்களில் ஆண்கள் 500 பேர்களும், பெண்கள் 127 பேர்களுமாகப் பெண்கள் பதிவு குறைந்து போயிருக்கிறது. அந்த வரிசைப்படி போட ஆரம்பித்தால் ஆண்களைத்தான் பத்தில் எட்டு பேர்களாக நியமிக்க வேண்டிய நிலையிருக்கிறது. கடந்த காலத்தில் 100 பெண்களைத் தனியாக அரசாங்கத்தின் அனுமதி பெற்று நியமித்தோம். ஆனால் ஆண் டாக்டர்கள், எங்கள் வாய்ப்பைத் தவிர்க்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார்கள். மற்றொன்று, கணவனும் மனைவியும் ஒரே யூனிட்டில் பணியாற்றக்கூடாது என்பது அவர்கள் காலத்திலேயிருந்து உள்ள விதியாகும். ஒரே ஊரிலே இருக்கலாமேதவிர, Not in the same Unit. ஒரே பிரைமரி ஹெல்த் செண்டரில் கணவனும், மனைவியும் ஒன்றாக இருக்கக்கூடாது. அப்படி ஒரே ஊரிலே இருந்தாலும் ஒரே மருத்துவ மனையில் இல்லாமல் வெவ்வேறு மருத்துவ மனைகளில் பணியாற்ற வேண்டுமென்றுதான் முறையிருக்கிறது. அதை மாற்ற முடியுமா என்பதுபற்றி நிலைமைகளையொட்டித்தான் பரிசீலிக்க வேண்டும்.

பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

*208 வினா—**திரு. த. சோனையா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம்—பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டட வேலை எப்போது முடிவடையும்?

(இ) அதன் மதிப்பீடு எவ்வளவு?

[1973 நவம்பர் 20

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) பூவந்தி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மருத்துவ மனையில் கொசுப் பெருக்கத்தை அகற்றும் பணி

*209 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் கொசுத் தொல்லையினை அகற்றிட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தஞ்சை மருத்துவக் கல்லூரி, மற்றும் மருத்துவமனைப் பகுதிகளில் கொசுப் பெருக்கத்தை ஒழிக்கும் பொருட்டு ரூ. 39,900 செலவில் வடிகால்கள் கட்டுவதற்கு அரசு அண்மையில் ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாக சென்னை பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவ மனை, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போன்றவற்றில் தொடர்ந்து உடல் நலக் குறைவு காரணமாகச் சிகிச்சை பெற்றவன் என்ற முறையிலே, இங்கெல்லாம் உள்ள கொசுத் தொல்லைகளைவிட, தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிகமாக கொசுத் தொல்லை உள்ளபடியே இருப்பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்ட அந்த மதிப்பீட்டுத் தொகையில் விரைவாக நடவடிக்கை எடுத்து, ஒரு சிறப்பு நடவடிக்கையாவது எடுத்து, விரைவில் அது கைகூட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தஞ்சை மருத்துவமனை தஞ்சை நகரசபையின் எல்லைக்குள் இல்லை. வேறு பகுதியில் இருப்பதால் நகரசபையினர் இதற்கு நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. ஆகவே, அந்த மருத்துவமனைக்குத் தனியாகத் திட்டம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் குடந்தையிலுள்ள பைலேரியா ஒழிப்பு அலுவலர்